www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

## PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

Date 28/4/85.

## நிக்கவரட்டியா

# பொலிஸ் நிலைய தாக்குதல்

வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக தென்னிலங்கையில் முதன்முதலாக காவல் நிலையம் வெற்றிகரமாக தாக்கப்பட்டுள்ளது. எந்த விதத்திலும் இரு தரப்பிலும் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படாமல் இத்தாக்குதல் மூலம் அனைத்து அரசு ஆயுதங்களும் அந்த நிலையத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. சிறீலங்காவில் வாழக்கூடிய மக்களின் இதயம் எனக்கருதப்படும் தொழிலாளர்கள் செறிந்து வாழும் குருநாகல் மாவட்டத்திலுள்ள நிக்கவரட்டியா காவல் நிலையம் கடந்த 25.4.85 அன்று அதிகாலை தமிழீழ மக்கள் விடுதலைக்கழக போராளிகளால் வெற்றிகரமாக தாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் முதலாளித்துவ அரசை எதிர்க்க உழைக்கும் வர்க்கம் அடி எடுத்து வைத்துக்காட்டியுள்ளது. கடந்த காலங்களில், தமிழ் தேசிய இனப்போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டம் அல்ல என்பதையும், இப்போராட்டம் சிறீலங்காவின் இனவாத, முதலாளித்துவ, பாசிச அரசுக்கு எதிரான போராட்டம் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம். அதனடிப்படையில் எமது போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பு தன்மையைக் கொண்டது என்பதையும், இப்போராட்டத்திற்கு சிறீலங்காவில் வாழக்கூடிய முற்போக்கு சக்திகளும், தொழிலாள விவசாய மக்களும் ஆதரவு தந்து முதலாளித்துவ அரசை எதிர்க்க வேண்டியதன் அவசியத்தை கடந்த காலங்களில் எமது வெளியீடுகள், பிரசுரங்கள், தமிழீழத்தின் குரல் வானொலி ஆகியவற்றின் மூலம் வலியுறுத்தி வந்துள்ளோம்.

இக்கொள்கையினால் ஏற்பட்ட முதல் வெற்றியே நிக்கவரட்டியா காவல் நிலைய காவலர்கள் எமக்கு ஒத்துழைத்தமையாகும். சிறீலங்கா இராணுவம் மற்றும் அரச படைகளில் பணியாற்றும் தோழர்கள் சிறீலங்காவில் வாழக்கூடிய பாட்டாளிகளின் பிள்ளைகளே என்பதை நாம் மறந்து விடவில்லை. இத்தாக்குதல் சம்பவத்தில் காவல் நிலையத்தை சேர்ந்த தோழர் ஒருவர், பாட்டாளியின் மகன் தவிர்க்க முடியாத நிலையில் இறந்ததை துயரத்துடன் தெரிவிக்கின்றோம். அவர் எந்த மொழி பேசுபவராக இருந்தாலும், எமது எதிரியின் எதிரி சக தோழர் என்பதை நாம் மறந்து விடவில்லை. அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்திலும் தொடர்ந்தும் நாம் வெற்றியடைவோம்.

"அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிவோம்"

சோதீஸ்வரன் (கண்ணன்)
படைத்துறைச்செயலர்,
தேசிய அரசியற்சபை,
தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிக்கவரெட்டியா பொலிஸ் நிலையம்மீது தாக்குதல்

## ஒரு பொலிஸ்காரர் பலி

வங்கியிலிருந்தும் ரூ. 50 லட்சம் கொள்ளை

உமா கோஷ்டியின் வேலை என்று சபையில் அனுரா தகவல்

குருநாகல் மாவட்டத்திலுள்ள நிக்கவரெட்டியா பொலிஸ் நிலையம் கடந்த இரவு தாக்கப்பட்டுள்ளது அங்குள்ள அரச வங்கி ஒன்றும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. வங்கியிலிருந்து 50 இலட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது.

பொலிஸ் நிலைய தாக்குதலால் ஒரு பொலிஸ்காரர் மரணமானுர்.

சிங்களவர்கள் முழுமையாக வாழும் நிக்கவரெட்டியாவில் உமாமகேஸ்வரன் கோஷ்டியினர் வியாழன் இரவு நடத்திய தாக்குதல் குறித்து பாராளுமன்றத்தில் அறிவிக்காதது ஏன்? என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயகா நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினுர்.

உமாமகேஸ்வரன் கோஷ்டியினர் மோட்டார் சைக்கிள்களில் வந்து நிக்கவரெட்டியா வங்கியைக் கொள்ளையடித்துள்ளனர். பொலிஸ் நிலையத்தைத் தாக்கி ஒரு சார்ஜண்ட்டையும் கொன்றுள்ளனர். மிக பாரதூரமான செயல் இது என்றும் திரு. அனுரா பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. வின்சென்ட் பெரேரா அவசரகால சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவர் குறுக்கிட்டு பேசினுர்.

அமைச்சர் திரு. வின்சென்ட் பெரேரா விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் நிக்கவரெட்டியச் சம்பவம் பற்றி முதலில் எதுவும் கூறவில்லை.

அப்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுராபண்டாரநாயகா பின்வருமாறு தெரிவித்தார்.

நேற்றிரவு (வியாழன்) முழுமையாக சிங்களவர்கள் வாழும் நிக்கவரட்டியவில் உமாமகேஸ்வரன் கோஷ்டியினர் தாக்குதல் நடத்தினர். பொலிஸ்நிலையத்தை அவர்கள் தாக்கியபோது ஒரு சார்ஜன்ட் கொல்லப்பட்டார். சிங்களவர்கள் வாழும் பகுதியில இப்படி இவர்கள் தாக்குதல் நடத்தியிருப்பது இதுவே முதல்தடவையாகும்.

'இந்த பயங்காவாத கோஷ்டியினர் சுதந்திரமாகத் திரிந்து நகரில் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்துள்ளனர். இவர்கள் நிக்கவரெட்டியவில் 50 இலட்சம் ரூபாவையும் கொள்ளையடித்துள்ளனர். இந்தவிபரங்களை அமைச்சர் ஏன் இச்சபையில் வெளியிடவில்லை.

அமைச்சர் திரு. வின்சென்ட் பெரேரா: தேசிய பந்தோபஸ்து அமைச்சர் இந்த விபரங்களைத் தெரிவிப்பார்.

திரு. அநுராபண்டாரநாயகா: பயங்காவாத சம்பவங்களை இப்போது வெளியிடும் நீங்கள் ஏன் இந்த பாரதூரமான தகவலைத் தெரிவிக்கவில்லை.

அமைச்சர் திரு. வின்சென்ட்பெரேரா: நாம் முழு விபரத்தையும் அறிந்துதானே வெளியிடவேண்டும்.

திரு லக்ஷ்மன் ஜயகொடி: நாட்டிலுள்ள எல்லோருக்கும் இப்போது இந்த விஷயம் தெரியும்.

## பாலமொன்றும் குண்டு வைத்து தகர்ப்பு

(எஸ். என். பிள்ளை)

நிக்கவரெட்டியா பொலிஸ் நிலையம் கடந்த இரவு அதுகாலை இனம் தெரியாத நபர்களினுல் தாக்கப்பட்டது. கடமையிலிருந்த ஒரு பொலிஸ்காரர் மரணமானுர்.

இந்த சம்பவத்தின்போது பொலிஸ் நிலையத்தில் இருந்தவர்கள் பாதுகாப்புத் தேடிக் கொண்டனராம்.

லான்ஸர் கார், ஹைஏஸ் வான் ஆகியவற்றில் வந்த இளைஞர்கள் கோஷ்டியே இந்த தாக்குதலை நடத்தியதாகத் தெரிகிறது.

கிரனேட் வீசியே பொலிஸ் நிலையத்தைத் தாக்கனராம்.

இதற்கு முன்னர் இக்கோஷ்டி நிக்கவரெட்டியா மக்கள் வங்கியை முற்றுகையிட்டு ஐம்பது இலட்சம் ரூபாவை கொள்ளையடித்துள்ளது.

இந்தக் கொள்ளையை நடத்திவிட்டு போகும் வழியில் பெற்றோல் நிலையமொன்றில் இவர்கள் பலாத்காரமாக பெற்றோல் பெற்றதாகவும் தெரியவருகிறது.

பெற்றோல் நிலையத்தில் இவர்கள் தரித்து நின்றபோது தமிழில் பேசியதாக தெரிய வருகிறது.

### 15 பேர் வந்தனர்

நிக்கவரெட்டிய பொலிஸ் நிலையத்துக்கு இரண்டு வாகனத்தில் 15 பேர் சீருடையில் வந்து கைக்குண்டு வீசியுள்ளனர். பொலிஸார் சப் மெஷின் துப்பாக்கி எடுத்தபோது அந்த பொலிஸ்காரரைத் தாக்கி விட்டு பொலிஸ் நிலையத் தொடர்புசாதனங்களைத் துண்டித்துவிட்டு மக்கள் வங்கிக்கு சென்றுள்ளனர்.

### புத்தளம் வங்கி நகைகள்

அண்மையில் தான் புத்தளம் மக்கள் வங்கியில் இருந்த தங்க ஆபரணங்கள் நிக்கவரெட்டியவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தன. இதனை பயங்கரவாதிகள் அறிந்து வைத்திருக்கின்றனர். இப்போது பயங்கரவாதிகளுக்கு பணம் தேவைப்படுகிறது. இதனுல் இப்படி திடீர் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தக் கொள்ளைக் கோஷ்டி வழியில் பாலமொன்றை தகர்ப்பதற்கு குண்டு வைத்துள்ளனர். பாலம் சிறு சேதத்திற்குள்ளானது.

## 'யுத்தம் எமது வீட்டு வாசலுக்கே வந்துவிட்டது' —சபையில் அநுரா

(எம்.பி.எம். அஸ்ஹர், ஏ. சொலமன்ராஜ்)

'நிக்கவரெட்டியா வங்கிக் கொள்ளைச் சம்பவம் காரணமாக யுத்தம் நமது வீட்டுவாசலுக்கே வந்து விட்டது' என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயகா பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

### லெபனுன் பயிற்சி

இந்த 'புளொட்' குழு லெபனுனில் பயிற்சி பெற்றது. பீ.எல் எப.பி. என்னும் லெபனுன் குழுவே இவர்களை பயிற்றுவித்துள்ளது. பீ. எல். ஓ. அல்ல பி.எல்.எப்.பி. ஜோர்ஜ் ஹபாஷின் குழுவாகும். இதனை அரசுலகம் உணரும் என நினைக்கிறன்

★ நிக்கவரெட்டிய தாக்குதலில் 15 பேர் ★

★ புத்தளம் தங்க நகைகள் வங்கிக்கு கொண்டுவரப்பட்டிருந்தன

வீரகேசரி சனிக்கிழமை (27—4—1985)

People's Liberation Organization of Thamil Eelam, Central Road, Worcester Park, Surrey KT4 8HY, U.K.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்